# அருள் நிறை மாமரியே

அருள் நிறை மாமரியே - எம்மை
அரவணைத்தாளும் அன்னையே
அருள்நிறை மாமரியே
வாழ்க வாழ்க மரியே
(புது வாழ்வின் மாதிரியே - 2)

**1**
நலன்களின் நாதன் யேசுவையே
மாநிலம் தனிலே கொணர்ந்தவளே
வரங்களின் வாய்க்கால் நீரன்றே
உணர்ந்து கொண்டோம் அம்மா - பாவ
விலங்கினைத் தகர்க்க நீ தரும் பணியில்
பங்கேற்கும் கூட்டு இரட்சகியே

( அருள்நிறை )

**2**
கலங்கிடும் நெஞ்சை தேற்றுகின்ற
கலங்கரையாகத் திகழ்பவளே
பரிந்துரை தந்து பாசத்துடன் எம்
குறை தீருமம்மா - நல் வானக
உலகில் ஊடகம் நீயே - எம்
செபத்தை விண்ணில் சேருமம்மா

( அருள்நிறை )

**3**
பேரன்பினாலே எம்மை தேற்ற
திருப்பூர் எழுந்த லூர்த்தன்னையே
காலங்களாக நீ புரிந்த
கருணைக்கு நன்றி சொன்னோம்
உன் பொன்னடி பாதம் நாம் நிதம்
தொடர புது வாழ்வு காண உதவுமம்மா

( அருள்நிறை )